

விருதுநகர் மாவட்டம் , காரியாபட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசகுளம் கிராமத்தில் ரூ .13.50 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடை, சீகனேந்தல் கிராமத்தில் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை மற்றும் திருவிருந்தாள்புரம் கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக்கடை ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்காக நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி பொதுச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.கே.மூக்கையா தேவர் அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பேரணியாகச் சென்று அன்னாரின் நினைவிடத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். உடன் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மதுரை விமான நிலையத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சி மிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் முன்னிலையில் எழுச்சிமிகு வரவேற்பு!

மதுரை, ஏப். 5 -

மதுரையில் நடைபெற்று வரும் அகில இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் பங்கேற்க விமான மூலம் மதுரை வந்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் முன்னிலையில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட்டது அதன் விபரம்

மதுரையில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக கூட்டாட்சி கோட்பாடே இந்தியாவின் வலிமை எனும் தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் எழுச்சி உரையாற்ற சென்னையில் இருந்து விமான மூலம் மதுரை விமான நிலையம் வந்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட திமுக சார்பில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் முன்னிலையில் முரசு கொட்டு முழங்க இரு வண்ணக் கொடி ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட்டது

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனும் பதாகைகள் ஏந்தியவாரும், கலைஞர் வாழ்க, தலைவர் தளபதி வாழ்க என கோஷங்கள் எழுப்பி கழகத்தினர் வரவேற்றார்கள்.

விமான நிலையம் முதல் அரசு பயணியர் தங்கும் விடுதி வரையிலும், அங்கிருந்து விழா நடைபெற்ற ராஜா முத்தையா மன்றம் வரையிலும் சாலையின் இரு புறங்களிலும் இரு வண்ணக் கொடிகள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை காட்சியளித்தது

மேலும் அரசு பயணியர் விடுதி முதல் விழா நடைபெறும் ராஜா முத்தையா மன்றம் வரை சாலையின் இருபுறங்களிலும் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர், பொதுமக்கள் ஆர்வத்துடன் கூடி திராவிட மாடல் அரசின் நாயகரே வாழ்க, பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்கிய மகத்தான முதல்வரே வாழ்க என கோசங்கள் எழுப்பி வரவேற்றார்கள்.

வழிநெடுகிலும் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சார கிராமிய கலை நிகழ்ச்சிகளும் மக்கள் கண் கவரும் வகையில் அமைந்திருந்தது

இந்நிகழ்வில் பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாக ராஜன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன்,

முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வ.வேலுசாமி, முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு மற்றும் மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட மற்றும் மதுரை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் உள்ளிட்ட திரளான பொதுமக்கள் பங்கேற்றார்கள்.

### பன்முக ஆற்றல் கொண்ட

# மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஏப்.5 -

பன்முக ஆற்றல் கொண்ட மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த சிவஞானம் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

மதுரையில் தீக்கதிர், தினகரன் ஆகிய நாளேடுகளிலும் சென்னையில் பாலிமர், புதிய தலைமுறை, கலைஞர் செய்திகள் ஆகிய தொலைக்காட்சிகளிலும் பணியாற்றியவர் சிவஞானம். தலைவர் கலைஞரின் நெஞ்சுக்கு நீதியை 230 வாரங்கள் தொடராகக் காட்சிப்படுத்தியதோடு, தலைவர் கலைஞருக்கே உரிய கரகரக் குரலில் பேசியவர் சிவஞானம் அவர்கள்.

கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்.

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை 'அரக்கர்' என்ற தலைப்பில் மிகச் சிறப்பாகப் மொழி பெயர்த்துள்ளார். இத்தகைய ஆற்றல்மிக்க ஆளுமைக்குணம் தாங்கிய அவர் உடல்நலக்குறைவால் காலமானது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

அவருக்கு எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன். அவரது மனைவி, மகன், மகள், நண்பர்களுக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### கடலூர் மாநகரத்தில்

# கழக அணிகளின் பொறுப்புகளுக்கு விண்ணப்பம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், ஏப். 5 -

08.04.2025 - செவ்வாய்க்கிழமை அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் மாநகரம், மஞ்சக்குப்பம், புதுபாளையம், திருப்பாதிரிபுலியூர், துறைமுகம் ஆகிய பகுதி கழகங்களுக்கு கழக சார்பு அணிகளின் பொறுப்புகளுக்கு விருப்பம் உள்ள கழக தோழர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்படும் என வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கடலூர் மாநகரம் மற்றும் மஞ்சக்குப்பம், புதுபாளையம், திருப்பாதிரி புலியூர், துறைமுகம் ஆகிய பகுதிக் கழகங்களுக்கு நிரப்பப்படாமல் இருக்கும் கழக சார்பு அணிகளின் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர், முன்னாள் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் இள.புகழேந்தி தலைமையிலும், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து ஆகியோர் முன்னிலையில் வருகின்ற 08.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கடலூர் தி.மு.க. மாநரக கழக அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெறப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கடலூர் மாநகர கழகத்திற்கு மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, சுற்றுசூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளுக்கும் மற்றும் மஞ்சக்குப்பம் பகுதி, புதுப்பாளையம் பகுதி, திருப்பாதிரி புலியூர் பகுதி, துறைமுகம் பகுதி ஆகிய பகுதி கழகங்களுக்கு தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணி, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, சுற்றுச்சூழல் அணி அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய சார்பு அணிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

எனவே விருப்பம் உள்ளவர்கள் உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, கல்வி சான்றிதழ், ஆகியவற்றுடன் வந்து விருப்பம் உள்ள பொறுப்புக்கு விண்ணப்பிக்கு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கூறியுள்ளார்.

### 'கம்யூனிசத் தந்தை' காரல் மார்க்சுக்கு சென்னையில் சிலை!

# தமிழ்நாடு முதல்வருக்கு - தொழிலாளர்கள் சார்பில் பணிவான நன்றி!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் சி.வி.கணேசன் பேச்சு!



**சென்னை, ஏப். 5 - சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் அரசின் சார்பில் சிலை அமைக்கப்படும் என அறிவித்தார்.**

**சட்டப்பேரவையில் முதல்வரின் இவ்வறிவிப்பினை அடுத்து பேசிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், "கம்யூனிசத் தந்தை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சிலை அமைக்கப்படும் என அறிவித்த முதல்வர் அவர்களுக்கு தொழிலாளர்கள் சார்பில் பணிவான நன்றி!" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் - அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:-

மே மாதம் 1 ஆம் நாளை தொழிலாளர் தினமாக அறிவித்து, அன்றைய தினத்தை அரசு விடுமுறையுடன் அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார். அவர் வழியில், கம்யூனிசத் தந்தை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சிலை அமைக்கப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு தொழிலாளர்களின் சார்பில் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் குறிப்பிட்டார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி தலைவர் பி.கே.மூக்கையா தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரசரடியில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா. ஜெயராம் மாவட்ட கழக நிர்வாகிகள் மா. ஒச்சு பாலு, சின்னம்மாள், மாநிலத் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன் இளைஞர் அணி சௌந்தர்ராஜன் பகுதிச் செயலாளர் எஸ் எஸ் மாறன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி

## ஏப்ரல் 5 (2005)



திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**